தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 216 ஆ) 247 இ) 30 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. 'தமிழன் என்றோர் இனமுண்டு' என்ற பாடலைப் பாடியவர்

அ) பாவேந்தர் ஆ) பாரதியார்

இ) ஔவையார் ஈ) நாமக்கல் கவிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. பின்வருவனவற்றுள் ஒன்றன்பால்

அ) குதிரைகள் ஆ) மாணவன் இ) மான் ஈ) மாதவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. "பகைவர் கைப்பட்டு மானம் இழந்து இரந்துண்ணும் நிலை வந்ததே" என்று மனம் வருந்தியவர்.

அ) இரும்பொறை ஆ) செங்கணனான்

இ) குமணன் ஈ) பாரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பழமொழி : காற்றுள்ள போதே ______________________.

அ) தூற்றிக்கொள் ஆ) தூத்திக்கொள்

இ) தூறிக்கொள் ஈ) தூர்த்திக்கொள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. எல்லாளனுடன் போர் தொடுத்தவன்

அ) காக்கவனத்தீசன் ஆ) சங்கிலியன்

இ) சூரத்தீசன் ஈ) துட்டகெமுனு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கதிரவன் என்பதைக் குறிக்கும் வேறு சொல்

அ) திங்கள் ஆ) பகலவன் இ) மதி ஈ) விண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. 'ஆற்றிலே தண்ணீர் அலைந்து வருமாப் போல்' என்ற பாடல்

அ) தலாட்டுப்பாடல் ஆ) அரிவி வெட்டுப்பாடல்

இ) கும்மிப்பாடல் ஈ) கடற்றொழில் பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இலங்கைத்தீவு முழுவதும் ஓர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1833 ஆ) 1505 இ) 1815 ஈ) 1948

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நீங்கள் + ஐ என்பதைச் சேர்த்தால் வருவது

அ) என்னை ஆ) நீங்களை இ) உன்னை ஈ) உங்களை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பின்வரும் எழுத்துகளில் உயிர்மெய் எழுத்து

அ) உ ஆ) கொ இ) க் ஈ) இ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஆடிப்பிறப்பு என்ற பாடலைப் பாடியவர்

அ) சின்னத்தம்பிப்புலவர் ஆ) சோமசுந்தரப்புலவர்

இ) பாரதியார் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சங்கிலியன் ______________________ சிறைப் பிடிக்கப்பட்டான்.

அ) ஒல்லாந்தரால் ஆ) ஆங்கிலேயரால்

இ) போர்த்துக்கேயரால் ஈ) ஆரியரால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மாங்காய் என்பதைப் பிரித்தால்.

அ) மாங் + காய் ஆ) மாக் + காய்

இ) மாம் + காய் ஈ) மா + காய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. முல்லைக்கொடிக்குத் தன் தேரை விட்டுச் சென்ற மன்னன்

அ) பாரி ஆ) ஓரி இ) அதியமான் ஈ) குமணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. போர்த்துக்கேயரை அடுத்து இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்

அ) ஒல்லாந்தர் ஆ) ஆங்கிலேயர் இ) ஆரியர் ஈ) வடவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இறுதிவரை ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய வன்னித் தமிழ் மன்னன்

அ) வீரபாண்டியகட்டப்பொம்மன் ஆ) சங்கிலியன்

இ) கயிலைவன்னியன் ஈ) பண்டாரவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஒரு செயல் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கும் காலம்

அ) எதிர்காலம் ஆ) நிகழ்காலம்

இ) இறந்தகாலம் ஈ) முடிந்தகாலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பாரி மகளிரைக் காப்பாற்றிய புலவர்

அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர்

இ) கபிலர் ஈ) சின்னத்தம்பிப்புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. குறள்:- மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் ____________________ வரின்

அ) தானம் ஆ) மானம் இ) வானம் ஈ) பாணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல்

அ) நன்மை ஆ) புதுமை இ) வேற்றுமை ஈ) தீமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கண்ணாடி ____________________ என மின்னியது.

அ) பளபள ஆ) மளமள இ) சலசல ஈ) கடகட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. புலவர் பாடிப் பரிசு பெற்றார். இங்கே வந்துள்ள செயப்படுபொருள்
____________________ .

அ) புலவர் ஆ) பெற்றார் இ) பாடி ஈ) பரிசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. குளக்கோட்டன் கட்டிய குளம்

அ) இரணைமடுக்குளம் ஆ) கந்தளாய்க்குளம்

இ) வவுனிக்குளம் ஈ) பண்டாரிக்குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. புனல் என்றால்

அ) நீர் ஆ) வளி இ) தீ ஈ) வானம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. ஔவையார் எழுதிய நூல்களுள் ஒன்று

அ) திருக்குறள் ஆ) மூதுரை இ) நாலடியார் ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இறந்தகால இடைநிலைகள்

அ) த், ட், ற், இன், ன் ஆ) த், ற், இன், ன், க்

இ) ந், ட், வ், இன், ன் ஈ) த், ட், ப், இன், ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. குதிரை வண்டி விரைவாகச் சென்றது. சென்றது என்பது

அ) வினையெச்சம் ஆ) பயனிலை

இ) எழுவாய் ஈ) பெயர்ச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. "தாயில் இனிய தமிழ்மொழியின் துயர் தாங்க மறப்பேனா" என்று கூறியவர்

அ) பாவேந்தர் ஆ) உருத்திரமூர்த்தி

இ) பாரதியார் ஈ) காசிஆனந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மீட்டுகிறாள் என்பதன் ஆண்பால் வடிவம்

அ) மீட்டுகிறது ஆ) மீட்டுகிறான்

இ) மீட்டுவான் ஈ) மீட்டினான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்து ஐந்து வகைப்படும். அவை மாச்சத்து, புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புகள் என்பவையாகும். அவை அனைத்தும் உடல் வளர்ச்சிக்கும் உடல் நலத்திற்கும் இன்றியமையாதவை. முட்டை பால் என்பவற்றில் புரதச் சத்து உண்டு. பருப்பு, உழுந்து, பயறு, கடலை, அவரை போன்றவற்றில் தானியப் புரதம் உண்டு. மாச்சத்து, கொழுப்பு என்பன எமக்குத் தேவையான வலுவைத் தருகின்றன. அவற்றையும் அளவாக உண்ண வேண்டும். அதிக வலு வேண்டும் என்று அதிகமாக உண்டால் உடற் பருமன் கூடிவிடும். உடற் பருமன் கூடினால் நோய்கள் பலவும் வந்து சேரும்.

1. பால், முட்டை என்பவற்றில் என்ன சத்து உண்டு?

______________________________

______________________________

2. ஊட்டச்சத்துகள் எவை?

______________________________

______________________________

3. எமக்குத் தேவையான வலுவைத் தருபவை எவை?

______________________________

______________________________

4. தானியப் புரதம் உள்ள உணவுகள் இரண்டு தருக.

______________________________

______________________________

5. உடற் பருமன் கூடினால் எவை வந்து சேரும்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. மாமன்னன் எல்லாளனது நினைவாலயம் எங்கே அமைக்கப்பட்டது?

2. தமிழர்களுடைய அமைதிவழிப் போராட்டம் ஏன் ஆயுதப் போராட்டமாக மாறியது?

3. பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத் தமிழரசுக்குத் திறை செலுத்திய சிங்கள அரசுகள் எவை?

4. ஏர்ப்பாட்டில் குறிப்பிடப்பட்ட கால மழை இரண்டின் பெயர்களைக் கூறுக?

5. தமிழரது கொண்டாட்டங்கள் யாவை?

6. வீட்டுத் தோட்டத்தினால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு கூறுக.

7. “பட்டினி கிடந்து பசியால் மெலிந்து....... எனத்தொடங்கும் பாடலை எழுதியவர் யார்?

புள்ளிகள் 10

4) **கீழ்வரும் பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இரண்டு கண்கள் பார்ப்பதும் ஒன்றே
இண்டு காதுகள் கேட்பதும் ஒன்றே
இரண்டு கால்கள் போவதும் ஓரிடம்
இரண்டு கைகளைச் சேர்ப்பதே பெரும்பலம்!

ஒற்றுமை இன்றேல் உலகம் அழியும்
வேற்றுமையாலே துன்பம் வளரும்
இரண்டு படாத ஒற்றுமையால் தான்
எதையும் வெல்லலாம் இன்பம் கொள்ளலாம்

அம்மா அப்பா ஒற்றுமை யால்தான்
அண்ணன் தங்கை ஒற்றுமை வளரும்
அம்மா பிள்ளை ஒற்றுமை யால்தான்
அன்பும் பாசமும் பின்னிப்படரும்

இனிய ஒற்றுமை வேண்டும் போது
இளைத்தவன் கூட உடல் பலம் பெறுவான்
இரண்டாய் ஆகிப் பிரிந்து விடாமல்
என்றும் ஒற்றுமை பேணிக் காப்போம்!

1. எது பெரும்பலம் எனக் கூறப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

2. எது இன்றேல் உலகம் அழியும்?

_______________________________________________

_______________________________________________

3. அண்ணன் தங்கை ஒற்றுமை எதனால் வளரும்?

_______________________________________________

_______________________________________________

4. வேற்றுமையால் எது வளரும்?

_______________________________________________

_______________________________________________

5. அன்பும் பாசமும் எதனால் பின்னிப் படரும்?

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**5) இலக்கண -மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும்?
   வல்லின மெய்யெழுத்துகளைத் தருக.

   ______________________________

   ______________________________

2. மூவிடங்களும் எவை?

   ______________________________

3 பின்வரும் வினைமுற்றுகளின் திணை, பால், காலம் என்பவற்றைத் தருக.

| | **திணை** | **பால்** | **காலம்** |
|---|---|---|---|
| விளையாடுவோம் | ________ | ________ | ________ |
| கூவுகின்றன | ________ | ________ | ________ |
| படிக்கின்றான் | ________ | ________ | ________ |

4. பின்வரும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

   மலை : ______________________________

   ______________________________

   மழை : ______________________________

   ______________________________

5. தேன்மொழி தமிழ்த் திறன் போட்டியில் கவிதை வாசித்தாள்.
   இச் சொல்லியத்தின் உறுப்புகளை இனங்கண்டு எழுதுக.

   எழுவாய் :- ______________________________

   பயனிலை :- ______________________________

   செயப்படுபொருள்:- ______________________________

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Der Vater von Cheeren kaufte einen Papagei. Der Papagei ist nun Cheeren's Haustier. Er frisst Früchte und heißt Yaazhini. Cheeren bringt Yaazhini jeden Tag Tamil bei. Yaazhini spricht Tamil.

Seran's vader kocht een papegaai voor Seran. De papegaai is een huisdier voor Seran, en heet Yalini. De papegaai eet fruit. De papegaai zegt:" vanakkam". Seran leert de papegaai iedere dag Tamil spreken. Yalini spreekt Tamil.

Il papa' di Seran ha comprato un pappagallo. Il pappagallo mangia frutta.Il pappagallo è l'animale domestico di Seran. Il pappagallo dice "vanakkam". Si chiama Yaleeny.Seran ogni giorno insegna a Yaleeny Tamil. Yaleeny parla Tamil.

Serans far købte en papegøje i dag. Papegøjen er Serans kæledyr. Papegøjen spiser frugt. Papegøjen kan sige goddag. Den hedder Yalini. Seran lærer Yalini tamilsk hver dag. Yalini kan tale tamilsk.

Serans pappa har köpt en papegoja. Papagojan är Serans husdjur. Papagojan äter frukt. Papagojan säger Vanakkam. Den heter Yalini. Seran lär Yalini Tamil varje dag. Yalini pratar tamil.

Le père de Seran a acheté un perroquet. Le perroquet est l'animal domestique préféré de Seran. Le perroquet mange des fruits. Il sait aussi dire bonjour. Il s'appelle Yalini. Seran lui apprend le tamoul tous les jours. Yalini parle le tamoul.

Seran's father bought and brought a parrot. The parrot is Seran's pet.The parrot eats fruit. The parrot says vanakkam. It's name is Yalani. Seran teaches tamil to Yalini every day. Yalini speaks tamil.

Faren til Cheran kjøpte en papegøye. Papegøyen er Cheran sin kjæredyr. Papegøyen spiser frukt. Den har fått kalle navn yalini. Hverdag lærer Cheran tamil til yalini. Yalini kan snakke tamil.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- வீட்டுத் தோட்டம்
- நீர் சென்ற சுற்றுலா
- நீரும் உமது நண்பரும்

புள்ளிகள் 20